605 / 19

Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

**'அ' பிரிவு**

**A1 வேற்றுமை**

Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q1 மூங்கில் ________________ பல பொருட்கள் செய்து, அதை விற்பனை செய்கிறார்கள்.

(1) மரத்தை
(2) மரத்திலிருந்து
(3) மரத்திற்கு
(4) மரத்துடன்

Q2 இன்று மக்கள் ________________ அழித்து, புதிய பல நகரங்களை உருவாக்குகிறார்கள்.

(1) காட்டோடு
(2) காட்டிற்கு
(3) காட்டிலிருந்து
(4) காட்டை

Q3 ஔவையார் தனது பாடல்கள் வழி பல அறநெறிகளை, ________________ விளக்கிக் கூறியுள்ளார்.

(1) மக்களோடு
(2) மக்களுக்கு
(3) மக்களை
(4) மக்களால்

www.testpapersfree.com

Q4. ____________________ சேர்ந்து நாரும் மணப்பது போல பாரதியுடன் நட்பு கொண்ட மல்லிகாவும் வாழ்வில் சிறந்து விளங்கினாள்.

1. பூவை
2. பூவில்
3. பூவோடு
4. பூவால்

Q5. வெள்ள நிவாரண பணியில் ஈடுபட்ட ______________________________ அமைச்சர் பாராட்டி பரிசு வழங்கினார்,

1. தொண்டூழியர்களால்
2. தொண்டூழியர்களை
3. தொண்டூழியர்களில்
4. தொண்டூழியர்களின்

www.testpapersfree.com

A2 செய்யுள் /பழமொழி

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள் /பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

**(10 மதிப்பெண்கள்)**

Q6. எரிகிற விளக்கானாலும் ______________ வேண்டும்.

(1) கொடுங்கோல்
(2) எண்ணெய்
(3) தூண்டுகோல்
(4) ஊன்றுகோல்

Q7. ______________ தன்னின் மெய்ப்பொருள் கல்வி.

(1) கைப்பொருள்
(2) செய்ப்பொருள்
(3) வரும்பொருள்
(4) வளர்ப்பொருள்

Q8. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் ______________ என்பும் உரியர் பிறர்க்கு.

(1) குணமுடையார்
(2) மாண்புடையார்
(3) பண்புடையார்
(4) அன்புடையார்

www.testpapersfree.com

Q9. வைகறை ________________ எழு.

(1) உறக்கம்
(2) தூக்கம்
(3) துயில்
(4) விடியல்

Q10. ________________ பாராத வேலை ஒரு முழம் கட்டை.

(1) உரியவன்
(2) உடையவன்
(3) குடியானவன்
(4) உண்மையானவன்

## A3 அடைமொழி/எச்சம்

**Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி/எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q11 நம் பொழுதை நல்ல வழியில் ________________ முயற்சி செய்ய வேண்டும்.

(1) கழித்த
(2) கழித்து
(3) கழிக்க
(4) கழிகின்ற

Q12 ஒட்டகச்சிவிங்கி உயரே இருக்கும் இலைத்தழைகளை தன் ________________ கழுத்தைக் கொண்டு பறித்துத் தின்னும்.

(1) அழகான
(2) நீளமான
(3) மெருதுவான
(4) குட்டையான

www.testpapersfree.com

Q13 குமரன் சவாரி செய்த குதிரை ____________ ஓடி முன்னிலையில் வந்தது.

(1) வேகம்
(2) வேகமாக
(3) வேகமான
(4) வேகமாய்

Q14 காட்டில் உள்ள யானைகளின் தந்தங்கள் ____________ இருந்தன.

(1) கடுமையாக
(2) நன்றாக
(3) ஆணித்தரமாக
(4) வலிமையாக

Q15 மக்கள் பல நூல்களைப் ____________ தங்கள் அறிவை வளர்த்துக்கொள்ள விரும்புகின்றனர்.

(1) படித்து
(2) படித்த
(3) படிக்க
(4) படிக்கும்

www.testpapersfree.com

A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

பீட்டரிடம் பலவிதமான பொம்மைகள் இருந்தன. அதில், அவனுக்கு Q16 __________ ஒற்றைக்கால் பொம்மை வீரன் ஒன்று இருந்தது. அது ஈயத்தால் செய்யப்பட்டது. மேலும், அவனிடம் காகிதத்தால் செய்யப்பட்ட 'பாலே' Q17 __________ அழகான பெண் பொம்மையும் இருந்தது. பீட்டர் அந்தப் பொம்மை வீரனை Q18 __________ ஓரமாக வைத்திருந்தான். அப்போது வீசிய பலமான காற்று, அந்தப் பொம்மைகளைத் தெருவில் விழச் செய்தது. இரு Q19 __________ அப்பொம்மையை ஒரு காகிதக் கப்பலில் வைத்து ஓடையில் மிதக்க விட்டனர். அந்தக் காகிதக் கப்பல் மிதந்து சென்று ஓர் Q20 __________ அடைந்தது. அந்தப் பொம்மை வீரன் ஆற்று நீரில் மிதந்துகொண்டிருந்தது. ஆற்றில் இருந்த ஒரு பெரிய மீன் அப்பொம்மையை விழுங்கியது. அந்த மீனை ஒரு மீனவன் பிடித்து விற்றான்.

Q16
(1) அன்பான
(2) கோரமான
(3) வெறுப்பான
(4) விருப்பமான

Q17
(1) நடனமாடும்
(2) பாடும்
(3) துள்ளும்
(4) நடிக்கும்

www.testpapersfree.com

Q18 (1) கதவு
(2) சன்னல்
(3) அலமாரி
(4) கப்பல்

Q19 (1) மீனவர்கள்
(2) பொம்மைகள்
(3) வீரர்கள்
(4) சிறுவர்கள்

Q20 (1) வீட்டை
(2) கடலை
(3) ஆற்றை
(4) ஓடையை

B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்

**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.**

சோழநாட்டு அரசர் தன் அரண்மனையைச் சுற்றி அழகான, பெரிய தோட்டத்தை அமைத்திருந்தார். ஒரு சமயம், பக்கத்து நாட்டு அரசர் விருந்தினராகச் சோழநாட்டுக்கு வந்திருந்தார். சோழ அரசர் அவரை அழைத்துக்கொண்டு போய்த் தன் தோட்டத்தைச் சுற்றிக் காண்பித்தார். தோட்டத்தின் அழகைக் கண்டு **வியந்தார்** அவர். "அரசே! மரம், செடி கொடிகளோடு பார்க்குமிடமெல்லாம் மலர்ச்சோலையாக உங்கள் தோட்டம் காட்சி தருகிறது; அற்புதம்; ஆனந்தம்!" என்றார். "இத்தகைய பெரிய தோட்டத்தை அமைக்க வேண்டும் என்பது என் நீண்டநாள் கனவு. நிறையத் தொழிலாளர்களின் ஒத்துழைப்பால் இது சாத்தியமாயிற்று," என்றார் சோழ அரசர்.

தோட்டத்தின் மூலையில் ஒரு சிறிய குடிசை இருந்தது. தோட்டத்தின் அழகைக் கெடுப்பதுபோல் அது இருந்தது. இக்குடிசையைப் பார்த்தார், விருந்தினராக வந்திருந்த அரசர், "சோழ அரசே! அந்தக் குடிசை

www.testpapersfree.com

இப்பெருந்தோட்டத்தின் அழகைக் கெடுப்பதாக உள்ளதே! அந்த இடத்திலும் ஏதாவது மலர்ச்செடிகளை வைத்திருக்கலாமே!" என்றார் விருந்தினராக வந்திருந்த அரசர். "நண்பரே! அந்த இடம் ஓர் ஏழைப் பாட்டிக்குச் சொந்தமானது. அதை விலைக்குத் தருமாறு பாட்டியிடம் கேட்டேன். பரம்பரையாக வாழ்ந்த இடம் என்று சொல்லி அதைத் தர மறுத்து விட்டார் அவர்," என்றார் சோழ அரசர். வியந்த நண்பர், "உங்களுக்கு இல்லாத அதிகாரமா? சுலபமாக அதை நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கலாமே," என்றார். "அந்த இடத்தைக் கொடுப்பதற்கும் மறுப்பதற்கும் பாட்டிக்கு உரிமை உண்டு. அரசர் என்றாலும் பிறர் உரிமையில் தலையிடுவது கூடாது அல்லவா? என் அதிகாரத்தை நான் நேர்மையாகப் பயன்படுத்த வேண்டுமல்லவா?" என்றார் சோழ அரசர். "தங்களின் நேர்மைக்குத் தலை வணங்குகிறேன் அரசே! அந்தக் குடிசையும் அதைச் சுற்றியுள்ள கரடுமுரடான இடமும்தான் இத்தோட்டத்துக்கு அழகைத் தருகிறது," என்றார் விருந்தினர். நேர்மையே அழகு அல்லவா!

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (8 மதிப்பெண்கள்)**

Q21 சோழ நாட்டுக்கு வந்திருந்த விருந்தினர் யார் ?

(1) சோழ நாட்டு அரசர்
(2) அண்டை நாட்டு அரசர்
(3) குடிசையில் வாழ்ந்த பாட்டி
(4) குடிமக்கள் அனைவரும்

Q22 சோழ நாட்டுத் தோட்டம் எப்படி தோன்றியது ?

(1) அழகாகவும் கரடுமுரடான இடமுமாகத் தோன்றியது
(2) அழகற்றும் ஏழை வாழும் குடிசையுடனும் தோன்றியது
(3) காட்டு மரஞ்செடிகள் நிறைந்ததாகத் தோன்றியது
(4) மரஞ்செடி, கொடிகளோடு பார்க்குமிடமெல்லாம் மலர்ச்சோலையாகத் தோன்றியது

www.testpapersfree.com

Q23 சோழ அரசரின் கனவு எவ்வாறு நனவானது ?

(1) அந்நாட்டு மக்களின் ஒருங்கிணைப்பால்
(2) நிறையத் தொழிலாளர்களின் ஒத்துழைப்பால்
(3) குடிசையில் வாழும் பாட்டியின் பரம்பரையால்
(4) பக்கத்து நாட்டு அரசரின் ஆலோசனையால்

Q24 அண்டை நாட்டு மன்னன் சோழ நாட்டு மன்னனைத் தலை வணங்கக் காரணம் என்ன ?

(1) அவர் சோழ நாட்டில் அழகிய தோட்டத்தை உருவாக்கியதால்
(2) அவர் பாட்டியின் குடிசையை எடுத்துக்கொள்ளாததால்
(3) அவர் தன் அதிகாரத்தை நேர்மையாக உபயோகித்ததால்
(4) அவர் நாட்டை நேர்மையாகக் கொண்டு செல்லாததால்

சொற்பொருள்

வினா 25-இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

(2 மதிப்பெண்கள்)

Q25 வியந்தார்

(1) விரைந்தார்
(2) அதிர்ச்சியடைந்தார்
(3) பாராட்டினார்
(4) ஆச்சரியப்பட்டார்

www.testpapersfree.com

## 'ஆ' பிரிவு

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| Q26 அம்மா பலகாரம் செய்ய எண்ணினார். அப்பாவைக் கடையிலிருந்து __________ வாங்கி வரச்சொன்னார். | Q26 ( ) |
| Q27 பாபுவின் மாமா தன் __________ சிறப்பாகச் செய்தார். அதனால், அவருக்குச் சிறந்த தொழிலாளர் என்ற விருது கிடைத்தது. | Q27 ( ) |
| Q28 தாத்தாவிற்கு அடிக்கடி தவறான தொலைபேசி அழைப்பு வந்தது. அதனால், அவர் தன் தொலைபேசி __________ மாற்றிக்கொண்டார். | Q28 ( ) |
| Q29 மாறன் வீட்டில் நடைபெறும் விருந்திற்கு வாழையிலையை வெட்டினான். அப்போது அதன் __________ , அவன் சட்டையில் படிந்துவிட்டது. | Q29 ( ) |

| | |
|---|---|
| (1) என்னை | (2) வெள்ளம் |
| (3) கரை | (4) பணியை |
| (5) பனியை | (6) எண்ணை |
| (7) வெல்லம் | (8) கறை |

www.testpapersfree.com

## D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.

# புத்தாண்டு விழாக்கள்

**ஏங்கள் பள்ளியில் நடைபெற இருக்கும் நிகழ்ச்சிக்கு வாருங்கள்!**

(புகழ்பெற்ற நாட்டிய தாரகை வேணி, (முன்னாள் மாணவி) நாட்டியம் ஆடுவார்.)

**நாள் : 25 ஜூன் (சனிக்கிழமை) பள்ளி விடுமுறை**

**நேரம் : இரவு 7.30 மணி முதல் இரவு 11 மணி வரை**

**இடம் : கலைக்கூட அரங்கம்**

**சிறப்பு விருந்தினர் : திருமதி. லிம் பவ் மெங்**

(சிங்கப்பூர் தேசியப் பள்ளி முதல்வர்)

தமிழ்நாட்டிலிருந்து வருகை
தரவிருக்கும் பிரபல பாடகி சுசீலாவுடன்
பள்ளிப்பாடல் குழு மாணவர்களும்
இணைந்து பாடுவார்கள்.

*இரவு 7.00 மணிக்குள் அனைவரும் இருக்கைகளில் அமரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

*ஏமாற்றத்தைத் தவிர்க்க முன் பதிவு செய்துகொள்ள இன்றே எங்களை அழையுங்கள்*

அன்புடன் தமிழ் ஆசிரியர்கள்

தொலைபேசி எண் : 67524455 / 90040421

- முன் பதிவு செய்வோருக்கு ஓர் அழகிய புத்தகப்பை இலவசமாகக் கிடைக்கும்.
  ( இதை வழங்குவோர் – மே லிங் நிறுவனம் )
- இந்த நிகழ்ச்சியின் வழித் திரட்டப்படும் பணம் சூன் செங் முதியோர் இல்லத்திற்கு நன்கொடையாக வழங்கப்படும்.

www.testpapersfree.com

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து, OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையைக் கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q30 இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்பவர் யார் ?

(1) பள்ளித் தலைமையாசிரியர்
(2) பள்ளி முன்னாள் மாணவிகள்
(3) பள்ளித் தமிழாசிரியர்கள்
(4) பள்ளிக்கு வரும் சிறப்பு விருந்தினர்

Q31 புத்தாண்டு விழாவில் வசூலிக்கப்படும் பணம் எதற்கு நன்கொடையாக வழங்கப்படும் ?

(1) சிங்கப்பூர் தேசியப் பள்ளிக்கு
(2) சூன் செங் முதியோர் இல்லத்திற்கு
(3) இலவசப் புத்தகப்பைகள் வழங்கும் நிறுவனத்திற்கு
(4) கலைக்கூட அரங்கிற்கு

Q32 முன் பதிவு செய்துகொள்வோர் அடையும் நன்மை என்ன ?

(1) நாட்டியத் தாரகையுடன் நடனம் ஆடலாம்
(2) சிறப்பு விருந்தினருடன் உரையாடலாம்
(3) இலவச நுழைவுச்சீட்டுகளைப் பெறலாம்
(4) ஒரு புத்தகப்பையை இலவசமாகப் பெறலாம்

www.testpapersfree.com

Q33 இப்புத்தாண்டு விழாவில் நடைபெற இருக்கும் இரண்டு நிகழ்ச்சிகளைத் தொகுத்து எழுது. (4 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

## D8 சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

உலகப் புகழ்பெற்ற மாவீரன் அலெக்சாண்டரின் தந்தை பிலிப். அவர் ஆசைப்பட்டு ஓர் உயர்ந்த இனக் குதிரையை வாங்கினார். அந்தக் குதிரை நல்ல உயரமாகவும் மிகக் கம்பீரமாகவும் அழகாகவும் விளங்கியது. அதற்கு 'புசிபேலஸ்' என்று பெயர் சூட்டினார். புசிபேலஸ் முரட்டுக் குதிரையாக இருந்தது. அதை ஓர் இடத்தில் நிறுத்தி அதன் மீது ஏறிச் சவாரி செய்ய யாராலும் முடியவில்லை. அவர்கள் அதன் முரட்டுத்தனத்தைக் குறைப்பதற்காகச் சவுக்கால் அடித்தனர். ஆனால், அது மேலும் முரட்டுத்தனமாயிற்று. கடைசியாகப் பிலிப் மன்னர் அந்தக் குதிரையை வேறு எங்காவது இழுத்துச் செல்லக் கட்டளையிட்டார்.

அதைப் பார்த்துக்கொண்டிருந்த மன்னரின் இளைய மகன், "இவ்வளவு அழகான குதிரையைப் பழக்க முடியாமல் அதை அப்படியே விட்டுவிடுவது மிகவும் கொடுமையான செயல். 'அவர்களுக்கு அதை எப்படிக் கையாளுவது என்றே தெரியவில்லை," என்று குறைப்பட்டுக் கொண்டான். அதைக்கேட்ட பிலிப் மன்னர், "அப்படியானால் உனக்குக் குதிரைகளை அடக்கும் திறமை இருக்கிறதா?" என்று கோபமாகக் கேட்டார். "நீங்கள் அனுமதி அளித்தால் என்னால் அந்தக்

www.testpapersfree.com

குதிரையை அடக்க முடியும்!" என்று நம்பிக்கையோடு கூறினான். ஆனால், அரசருக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

அவன் விரைந்து, குதிரையின் தலையைச் சூரியனுக்கு நேராகத் திருப்பினான். அந்தக் குதிரை தனது நிழலைப் பார்த்து மிரண்டு போயிருந்ததை அவன் அறிந்திருந்தான். அதன் பிறகு, அந்தக் குதிரையிடம் அமைதியாவும் அன்பாகவும் பேசினான். அது சிறிது சாந்தம் அடைந்தது. அதன்மீது தாவி ஏறி, முதுகின்மீது சாமர்த்தியமாக அமர்ந்துகொண்டான். அந்தக் குதிரையை மிக வேகமாகச் செலுத்தியப்படியே அரண்மனையை விட்டு வெளியே சென்றுவிட்டான். புசிபேலஸ் குதிரை ஓடி களைத்துவிட்டது. அதற்குச் சேனம் பூட்டி அதன் மீது அமர்ந்து அரண்மனைக்கு வந்தான். அங்குத் தந்தை, அவனுக்கு என்ன விபத்து ஏற்பட்டதோ என்று நினைத்துக் கவலையோடு நின்றுகொண்டிருந்தார். அவனைப் பார்த்ததும் அவர் கவலை குறைந்தது. தந்தையைக் கண்டதும் குதிரையின்மீது இருந்து குதித்து இறங்கினான். குதிரை இப்போது மிக அமைதியாக நின்றுகொண்டிருந்தது.

அலெக்சாண்டர் தம் வீரத்தாலும் திறமையினாலும் உலக வர்லாற்றில் ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்தார். அவரை உலகம் மாவீரன் அலெக்சாண்டர் என்று போற்றியது.

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட <u>பகுதியிலிருந்து</u> <u>விடைகளைக் கண்டறிந்து</u> எழுது.** **(22 மதிப்பெண்கள்)**

Q34. பிலிப் வாங்கிய குதிரை எப்படிப்பட்டது ? (3 மதிப்பெண்கள்)

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

www.testpapersfree.com



Q35 'புசிபேலஸ்' என்ற குதிரையை ஏன் சவுக்கால் அடித்தனர் ?

(3 மதிப்பெண்கள்)

Q36 மன்னரின் இளைய மகனுக்கு ஏற்பட்ட குறை என்ன ? (4 மதிப்பெண்கள்)

Q37 அலெக்சாண்டரிடம் காணப்பட்ட நம்பிக்கை என்ன ? (2 மதிப்பெண்கள்)

www.testpapersfree.com

Q38. அலெக்சாண்டர் இத்திறமை அடைக என்ன செய்தான்? (4 மதிப்பெண்கள்)

Q39 பிலிப் மன்னர் எதை எண்ணி வருந்தினார் ? (2 மதிப்பெண்கள்)

Q40 உன் நண்பன் குமார் எந்த காரியத்தையும் எளிதில் கைவிட்டுவிடுவான். அதனால், உலகப் புகழ் மாவீரன் அலெக்சாண்டரிடம் காணப்பட்ட இரண்டு சிறப்புகளைச் சுட்டிக்காட்டி நீ உன் நண்பருக்குக் குறிப்பு எழுது. (4 மதிப்பெண்கள்)

அன்புள்ள குமாருக்கு,

நீ தன்னம்பிக்கை இல்லாமல் இருப்பதைக் கண்டு நான் வேதனை அடைகிறேன். நான் படித்த கதையில் மாவீரன் அலெக்சாண்டரின் இரண்டு சிறப்புகளை உன்னிடம் பகிர்ந்துகொள்ளப் போகிறேன்.

www.testpapersfree.com

## மூங்கில் மரத்திலிருந்து ....... ANSWER KEY

| வேற்றுமை | அடைமொழி / எச்சம் | தெரிவுவிடைக் கருத்தறிதல் |
| --- | --- | --- |
| 1. (2) | 11. (3) | 21. (2) |
| 2. (4) | 12. (2) | 22. (4) |
| 3. (2) | 13. (2) | 23. (2) |
| 4. (4) | 14. (4) | 24. (3) |
| 5. (3) | 15. (1) | 25. (4) |
| **செய்யுள்** | **முன்னுணர்வுக் கருத்தறிதல்** | **ஒலி வேறுபாடு** |
| 6. (3) | 16. (4) | 26. (7) |
| 7. (1) | 17. (1) | 27. (4) |
| 8. (4) | 18. (2) | 28. (6) |
| 9. (3) | 19. (4) | 29. (8) |
| 10. (2) | 20. (3) | |

**கருத்து விளக்கப் படம்**

30. (3)
31. (2)
32. (4)

33. இப்புத்தாண்டு விழாவில் நடைபெற இருக்கும் முதல் நிகழ்ச்சி, முன்னாள் மாணவியான புகழ்பெற்ற நாட்டிய தாரகை வேணியின் நாட்டியம் ஆகும். இரண்டாவது நிகழ்ச்சி தமிழ்நாட்டின் பிரபல பாடகி சுசிலாவுடன் பள்ளிப்பாடல் குழு மாணவர்களும் இணைந்து பாடுவது ஆகும்.

34. பிலிப் வாங்கிய குதிரை உயர்ந்த இனக்குதிரை ஆகும். அது நல்ல உயரமாகவும் மிகக் கம்பீரமாகவும் அழகாகவும் விளங்கியதோடு; முரட்டுக்குணம் கொண்டதாகவும் இருந்தது.

35. 'புசிபேலஸ்' என்ற குதிரையை ஓர் இடத்தில் நிறுத்தி, அதன் மீது ஏறிச் சவாரி செய்ய யாராலும் முடியாததால் அதன் முரட்டுத்தனத்தைக் குறைப்பதற்காக அதைச் சவுக்கால் அடித்தனர்.

36. அவ்வளவு அழகான குதிரையைப் பழக்க முடியாமல் அதை அப்படியே விட்டுவிடுவது மிகவும் கொடுமையான செயல் என்பதும் அவர்களுக்குக் குதிரையை எப்படிக் கையாளுவது என்றே தெரியவில்லை என்பதுமே மன்னரின் இளைய மகனுக்கு ஏற்பட்ட குறை ஆகும்.

37. தன்னால் அந்தக் குதிரையை அடக்க முடியும் என்பதே அலெக்சாண்டரிடம் காணப்பட்ட நம்பிக்கை ஆகும்.

38. அலெக்சாண்டர் குதிரையை அடக்க முதலில் விரைந்து, அதன் தலையைச் சூரியனுக்கு நேராகத் திருப்பினான். அதன் பிறகு, அவன் அந்தக் குதிரையிடம் அமைதியாகவும் அன்பாகவும் பேசினான். குதிரை சிறிது சாந்தம் அடைந்ததும், அவன் அதன்மீது தாவி ஏறி, அதன் முதுகின்மீது சாமர்த்தியமாக அமர்ந்து கொண்டான்.

39. அலெக்சாண்டருக்கு என்ன விபத்து ஏற்பட்டதோ என்பதை எண்ணிப் பிலிப் மன்னர் வருந்தினார்.

40. அலெக்சாண்டரிடம் காணப்பட்ட ஒரு சிறப்பு, அலெக்சாண்டர் எந்தக் காரியத்தையும் எளிதில் கைவிட மாட்டான். பிலிப் மன்னர், முரட்டுக் குதிரையை என்ன செய்வது என்று தெரியாமல் அதை வேறு எங்காவது இழுத்துச் செல்லக் கட்டளையிட்ட போதுகூட, அலெக்சாண்டர் பிரச்சினை என்ன என்பதைக் காண முயன்றான். இரண்டாவது, அவர் சாமர்த்தியம் மிக்கவர். மற்றவர்களைப் போலக் குதிரையை அவர் அடிக்கவில்லை. குதிரை தனது நிழலைப் பார்த்து மிரண்டு போயிருந்ததுதான் பிரச்சினை என்பதை அவர் அறிந்து கொண்டு சாமர்த்தியமாக அதை அடக்கினார்.

www.testpapersfree.com